

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி நேற்று (24.03.2025) சென்னை, புரசைவாக்கத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் நியாய விலைக் கடையில் விற்பனை முனையம் மற்றும் எடை தராசு இணைத்தல் தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின் போது உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன், மற்றும் உணவு பொருள் வழங்கல் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பணியாற்றும் பெண்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் - பல்லாயிரக்கணக்கானோர் தங்கும் வகையில்

# ரூ.708 கோடியில் விடுதி கட்டிக் கொடுத்தவர் முதல்வர்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் சி.வி.கணேசன் பெருமிதம்!

சென்னை, மார்ச். 25-

சட்டப் பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் பி. தங்கமணி பேசும்போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் சி.வி.கணேசன், 'பணியாற்றும் பெண்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் வகையில், பல்லாயிரக்கணக் கானோர் தங்கும் வகையில், ரூ.708 கோடியில் விடுதி கட்டி கொடுத்த இந்தியாவி லேயே ஒரே முதல்வர் நம் தமிழ்நாட்டு முதல்வர் என்று



பெருமிதத்துடன் குறிப்பிட் டார்.

இதுகுறித்து சட்டப் பேர வையில் அமைச்சர் சி.வி. கணேசன் தெரிவித்ததா வது:-

உற்பத்தி செய்யக்கூடிய துறைகளில் தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன் னது போன்று, 43 சதவிகிதப் பெண்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதைவிட மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், பெண்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்ப தற்காகத்தான் Foxconn நிறுவ னத்திற்கு அருகாமையில் 708 கோடி ரூபாய் மதிப்பீட் டில், பல்லாயிரக்கணக்கான பெண்கள் தங்கக்கூடிய விடு தியைக் கட்டிக் கொடுத் துள்ள ஒரே முதலமைச்சர் இந்திய அளவில் மாண்பு மிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும் புகிறேன். (மேசையைத் தட் டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

காளிபாளையம் ஊராட்சியில்

# கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு பரிசீலிக்கும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தகவல்!

சென்னை, மார்ச். 25-

சட்டப் பேரவையில் திருப்பூர் (வடக்கு) தொகுதி, காளிபாளையம் ஊராட்சி யில் கால்நடை மருத்துவ மனை அமைக்க அரசு முன் வருமா? என அ.தி.மு.க. உறுப்பினர் எழுப்பிய கேள் விக்கு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் பதில ளித்து பேசியதாவது:-

திருப்பூர் வடக்குத் தொகுதி, காளிபாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கச் சாத்தியக்கூறுகளே இல்லை.

புதிதாக கால்நடை நிலை யங்களை ஏற்படுத்த அப்பகு திகளிலுள்ள கால்நடைகளி னுடைய எண்ணிக்கை, ஏற்கெனவே, செயல்பட்டுவ ரும் கால்நடை கிளை நிலை யங்கள், கால்நடை கிளை நிலையங்களுக்கிடையே யான இடைப்பட்ட தூரம் ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்டு விதிமுறை கள் வரையறுக்கப்பட்டுள் ளன. கால்நடைகளின் எண் ணிக்கை 3000த்திற்கும் அதி கமாகவும், அந்நிலையத்தி லிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் வேறு கால் நடை நிலையங்கள் இல்லாத பட்சத்தில், முதலில் கால் நடை கிளை நிலையம் துவக் கப்படுகிறது. பின்னர், அந் தப் பகுதியில் கால்நடை களின் எண்ணிக்கை 5,000 க்கும் அதிகமாக உயரும்பட் சத்தில் கால்நடை மருந்தக மாக தரமுயர்த்தப்படுகிறது. அந்த மருந்தகத்திற்கு தினசரி 40 கால்நடைகளுக்கு மேல் சிகிச்சைக்கு வரும்பட்சத் தில், கால்நடை மருத்துவம னையாக தரம் உயர்த்தப்படு கின்றது. உறுப்பினர் கோரி யுள்ள காளிபாளையம் ஊராட்சியில் கால்நடை நிலையம் எதுவும் இதுவரை தோற்றுவிக்கப்படவில்லை. அக்கிராமத்தில் 1,060 மாட் டின் அலகுகளும், 1,818 ஆட்டின் அலகுகளும், 200 கோழியின் அலகுகளும் என மொத்தம் 3,068 கால்நடை அலகுகள் உள்ளன. மேலும், உறுப்பினர் கோரியுள்ள காளிபாளையம் ஊராட்சியி லிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் பெருமாநல் லூர் கால்நடை மருந்தக மும், 11 கிலோ மீட்டர் தொலைவில் கோவிலம் பட்டி கால்நடை மருந்தக மும் செயல்பட்டு வருகின் றன. எனவே, காளிபாளையம் ஊராட்சியில் முதல்கட்ட மாக கால்நடை கிளை நிலை யம் மட்டும் அமைக்க சாத் தியக்கூறுகள் உள்ளன. அது குறித்து, அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு, நிதிநி லைமையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டு சென்று, பரிசீலிக் கப்படும்.



திருப்பூர் (வடக்கு) தொகு தியில் சுமார் 17 ஆயிரம் மாட்டினங்களும், சுமார் 17 ஆயிரம் ஆட்டினங்களும், சுமார் 100 பன்றிகளும் உள் ளன. இவற்றிற்கு அனைத்து சேவைகளும் வழங்கும்வித மாக, 5 கால்நடை மருந்தகங் களும், 2 கிளை நிலையங் களும் செயல்பட்டு வருகின் றன. தொலைதூர பகுதியி லுள்ள விவசாயிகளினுடைய கால்நடைகளுக்கு அனைத்து சேவைகளையும் வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு முத லமைச்சர் அவர்களால் 200 நடமாடும் கால்நடை மருத் துவ ஊர்திகள் கடந்த ஆகஸ்ட் மாதம் துவக்கி வைக்கப்பட்டன. இந்த ஊர் திகள் திங்கள் முதல் சனிக்கி ழமை வரை, கிராமங்களில் முகாம்கள் நடத்துவதன்மூ லம் மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. திருப் பூர் (வடக்கு) மாவட்டத்தி லுள்ள 8 சட்டமன்ற தொகு திகளுக்கும் மொத்தம் 7 நடமாடும் கால்நடை மருத் துவ ஊர்திகள் மூலமாக மருத்துவ சேவைகள் வழங் கப்படுகின்றன. திருப்பூர் (வடக்கு) தொகுதியில் 2 நட மாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் சேவைகளை வழங்கி வருகின்றன. இவற் றின்மூலம் பொங்குபாளை யம் ஊராட்சியில் உள்ள பரமசிவன்பாளையம், கணக் கம் பாளையம் ஊராட்சி, நாதம்பாளையம், நல்லிக் கவுண்டன் பாளையம் ஊராட்சி, புதுப்பாளையம் ஊராட்சி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறி யுள்ள காளிபாளையம் ஊராட்சி அமைந்துள்ள கிராமங்களான தெற்கு சீராண்பாளையம், கணபதி பாளையம் ஊராட்சிகளுக் கும் மற்றும் சின்னாரி பாளையம், பருத்திக்காட் டுப்பாளையம் ஆகிய பகுதி களிலுள்ள கால்நடை களுக்கு அனைத்து சேவை களும் வழங்கி வருகிறது. இவற்றைதவிர, மேலும், நட மாடும் கால்நடை மருத்துவ ஊர்தி சேவையை உறுப்பி னர் கோரினால், துறை அதி காரிகளை அங்கு அனுப்பி, ஆய்வு செய்து தேவைப்ப டும் நிகழ்வில் அதுவும் வழங் கத் தக்க நடவடிக்கை எடுக் கப்படும்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கே.வி.இராமகிருட்டிணன் பங்கேற்பு! அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் சார்பில்

# மதுரையில் 26 ஆம் ஆண்டு திருக்குறள் விழா!

## ஆ.சுந்தர ஆவுடையப்பன் இலக்கியப் பேருரையாற்றினார்!

மதுரை, மார்ச் 25 -

அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் 26 ஆம் ஆண்டு திருக்குறள் விழா 16.03.2025 அன்று மதுரை மணியம்மை பள்ளி யில் புரவலர் அரிமா மகா. கணேசன் தலைமையில் நடை பெற்றது.

மன்றத் துணைத் தலைவர் டி.வி. அழகர், மன்றத்துணைச் செயலாளர் லெ.முருகேசன், ரெ. கார்த்திகேயன் லெ. வெள்ளைச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மன்றத் தலைவர் என்.எம். மாரி வரவேற்புரை ஆற்றி னார்.

புரட்சிப் பாவலர் மன்றத் தலைவர் "பெரியார் நெறியா ளர் பி.வரதராசன் தொடக்க வுரை ஆற்றினார்.

உலகத் திருக்குறள் பேரவை மதிப்புறுத் தலைவர் கார்த்திகேயன் மணி மொழி யன் திருவள்ளுவர் திருவுருவப் படத்தை திறந்து வைத்து உரையாற்றினார்கள்.

திருக்குறள் போட்டியில் வெற்றிபெற்ற மாணவச் செல் வங்களுக்கு "சிறுகதை மன் னர்' எஸ்.எஸ். தென்னரசு நினைவு பொற்கிழியினை மேனாள் மேயர் பெ.குழந்தை வேலு வழங்கி உரையாற்றி னார்கள்.

"வள்ளுவம் புதுமை" என்ற தலைப்பில் அகில இந்திய வானொலி நிகழ்ச்சி மேனாள் இயக்குநர் முனைவர் ஆ. சுந் தர ஆவுடையப்பன் இலக்கி யப் பேருரை நிகழ்த்தினார்கள்.

அழகப்பா அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறை மேனாள் தலைவர் முனைவர் ச. முருகேசன், திராவிட இயக் கத் தமிழர் பேரவை மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து, " தமிழ்ச் செம்மல் " விருது பெற்ற போற்றுதலுக்குரிய புலவர் செயபால்சண்முகம், குறும்பா பாவலர் இரா. இரவி, சுற்றுச் சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், உலகத் திருக்குறள் பேரவை மாவட்டச் செயலா ளர்கள் கவிஞர் மார்சல் முரு கன், கவி பாரதி அசோக்ராசு செந்தமிழ்க் கல்லூரி விரிவுரை யாளர் அதிவீரபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங் கினர்.

விழாவில் தொழிற்சங்கத் தலைவர் மகபூப்ஜான், சிறு பான்மையினர் நல உரிமைபி னர் பிரிவு மாவட்ட அமைப் பாளர் க. அ. உஸ்மான் அலி, செய்கிந்துபுரம் வீட்டு உரிமை யாளர் நலசங்கத் தலைவர் மலர் பாண்டியன், புலவர் முருகு பாரதி, அமர்நாத், இலக்கிய அணி கருப்பையா, மாமன்ற மேனாள் உறுப்பினர் கா.ரா.முருகேசன், இரா. சந்தி ரசேகர், அய்யாவு , குமார்வே லுச்சாமி, திருமதி இரசினி அமுது, திருமதி கே.வி.ஆர். வசந்தா மற்றும் தமிழ்ச் சான் றோர் பெருமக்கள் பங்கேற் றுச் சிறப்பித்தனர்.

மன்றத்தின் செயலாளர் கே.வி.இராமகிருட்டினன் அவர்களால் தீர்மானங்கள் வாசித்து நிறைவேற்றப்பட்டு நன்றி கூறலுடன் விழா இனிது முடிவுற்றது.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்டம் - முதல்வரின் மனிதநேய விழா - புகழரங்கம்!

## அமைச்சர் எ.வ.வேலு - சபாபதி மோகன் - காசி முத்துமாணிக்கம் புகழுரைத்தனர்!

சென்னை, மார்ச்.25-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 33, முதல்வர் கொள்கை குன்றம்! உயர் வார் அவரால் என்றும்!! எனும் தலைப்பில் அம்பத் தூர் வடக்கு பகுதியில் மாபெரும் புகழரங்கம் 24.03.2025 திங்கள் அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, அம்பத்தூர், ஓ.டி.பேருந்துநிலையம் அரு கில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் அம் பத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஜோசப் சாமு வேல் எம்.எல்.ஏ தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச் சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை பெரு நகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், பி.கே. மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி, எம். டி.ஆர்.நாகராஜ், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, எல். பி.எப்.மோகன், டாக்டர். ஏ.பி.பூர்ணிமா எம்.சி, ஜி.வி. நாகவள்ளிராம், து.ஆயி ரம், கு.கிருஷ்ணமூர்த்தி, ஜெ.பாலமுருகன், க.முரளி பாபு, அ.செல்வம், க. கதிஜா, மா.ரமேஷ், வி.ரவீந் திரன், பு.வீரா(எ) வீரராக வன், வெ.இராதாகிரு ஷ் ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, க.பொற் கொடி எம்.சி, எம்.இ.சேகர் எம்.சி, எஸ்.உமா எம்.சி, உஷாநாகராஜ் எம்.சி முன் னிலையில் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கழக கொள்கை பரப்புச் செயலாளர் சபாபதி மோகன், கழக வர்த்தகர் அணிச் செய லாளர் காசி முத்து மாணிக் கம் ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

பி.வி.மூர்த்தி, பொ.நவ ராஜ்ரவி, க.ஜீவா, எஸ். பி.அரிகிருஷ்ணன், மா.குப் புசாமி, எம்.ஹரிகிருஷ் ணன், எம்.குணசேகரன், ப. மதி, ஆ.இரா.அருண், கோ. சேகர்லால் வரவேற்றனர்.



மேலும், இப்புகழரங்கத் தில் சன்.முனியாண்டி, சுதா தினதயாளன்A/C ராஜேஸ்வ ரிஸ்ரீதர், நா.துலுக்காணம் ஜி.தாமோதரன் துரைகண் ணன் எம்.பெரோஸ்கான் பி.விஜயகுமார் எம்.விநாய கம் ஆர்.எஸ்.சித்திக் க. பா.பிரதீப்குமார் ம.அசோக் குமார் எஸ்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது இரா.வீர மணி அம்பத்தூர் கிழக்கு தெற்கு பகுதி கழக நிர்வாகி கள் து.ஜெகநாதன் பி.ஆர். இளங்கோவன் பா.பொற் செழியன் ரா.லட்சுமிராங்க சாமி மேனாம்பேடுஇ. ராமு, மு.நடராஜன் து.செல் வராஜ் ஆர்.கதிரவன் டாக் கவிதா செல்லதுரை கு.சங் கர். அம்பத்தூர் கிழக்கு தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்மு கம் மு.சுந்தர்ராஜ் சீ.லோக நாதன் சு.மோகன்குமார் மு.விஜயகுமார் த.வ.லால் த.பிரகாஷ்குமார் சி.சீனிவா சன் நா.நெப்போலியன் இரா.டீக்கா. அம்பத்தூர் கிழக்கு தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: கே. செல்வம் கோ.முத்துகுமார சாமி கோ.ராஜ்குமார் ந.கும ரவடிவேல் ச.கோதண்டன் கோ.இன்பசேகரன் இ.நட ராஜன் ஆர்.விமலன் ஜெ. ஐயப்பன் எஸ்.பரமசிவம் பொ.சேதுராமன்(எ)பொன் சேட்டு ஏ.கே.டி.பால்கர் ஆர்.ஜெயராமன் சோ.மதிய ழகன் எஸ்.எஸ்.சவரிமுத்து பா.மாறன் டி.சுரேஷ்பாபு எஸ்.கே.சதீஷ்குமார் எஸ். எம்.முருகானந்தம் ஏ.வி. தட்சிணாமூர்த்தி.

மாவட்ட பிற அணிக ளின் துணை அமைப்பாளர் கள்: கு.வேணுகோபால் பக் கீர்மொய்தீன் கே.எஸ். வரதராஜன் பிரவீன்குமார் பிரகாஷ்ஆனந்த் மோகன் பாபு என்.மோகன் டாக் டர்.பூபாலன் டாக்டர்ஜ லால் டாக்டர் அன்பு ஆர். செல்வம் இரா.ராதாகிருஷ் ணன் தமிழ்செல்வன் ஹேத வகுமார் யு.இலக்கியா பி.பாலாஜி கே.அன்பரசு மரியகலைசெல்வன் எஸ். ஜெஸ்டின்பிரபு எஸ்.ஜெய பாலன் ஆர்.எம்.இளங்கோ எஸ்.சிவசண்முகம் ஆ.பிர காஷ் ச.கோவிந்த் இரா. பாலசந்தர் எஸ்.துரைக ணேஷ் கே.பிரகாசம் ரா. மகேஷ்வரி ஸ்னோபகிருஷ் ணமூர்த்தி ஆஷைஆரோக்கி யம் தில்மகேஷ் அசோக் ஆண்ரூஸ் எம்.பாலகிருஷ் ணன் (எ)அண்ணாதுரை சா.ஜெகநாதன் டி.ஸ்ரீதரன் வி.இராமு இரா.பாலமுரு கன் எம்.இ.எஸ்.சந்தோஷ்கு மார் மு.க.அரியஸ்முகமது வி.பி.ரவீந்திரன் என்.ஸ்ரீத ரன் ஆர்.பிரேம்குமார் எஸ். பிரவீன்குமார் ஆ.நாதன் வி. மகேஷ்பாபு பி.ஜெயபிர காஷ் ஏ.என்.ஆர்.செந்தில்கு மார் எஸ்.அன்புச்செல்வன் எஸ்.பாண்டியன் ஜி.மெல் வின்ஜோதி எம்.எஸ்.ரமேஷ் சி.லதா ஏ.கே.பி.கிருஷ்ணன் வி.மில்லன் சா.மோகன்ராஜ் க.சத்தியநாராயணன் எம்.இ.சந்திர எல்.ஜெய் லான்ஸ் சுந்தர்ராஜன் கே. மகேஷ் கே.எம்.ஷாம்சுந்தர் டி.பாலமுருகன் ஆர்.ஜான கிராமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்புகழரங்கத்தில் வட்ட செயலாளர் மு.இருகு நன்றி கூறினார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் தீவுத்திடல்,

# 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2025!

சென்னை, மார்ச் 25-

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்களால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு அரசு 1971 ல் தொடங்கப்பட்டு இதன் படிப்படியான வளர்ச்சியில் ஒரு சிறப்பம்சமாக நலத்திட் டங்கள் எளிதில் மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் முதலாவது இந் திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 1974ம் ஆண்டு தொடங்கப்பட்டு கடந்த 48 ஆண்டு களாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழகத்திற்கு சொந்தமான சென்னை தீவுத்திடலில் நடைபெற்றுவருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, இந்த ஆண்டும் பொருட்காட்சி யினை நடத்துவதற்கு தமிழ் நாடு அரசு அனுமதி அளித்து, அரசுத்துறை அரங்கங்கள் அமைக்க ருபாய் 1.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அர சாணை பிறப்பிக்கப்பட்டு, கடந்த 06.01.2025 அன்று 49வது இந்திய சுற்றுலா மற் றும் தொழில் பொருட் காட்சி தொடங்கப்பட்டு, 11.01.2025 அன்று முதல் பொது மக்களுக்கு நுழைவுச் சீட்டு வழங்கப்பட்டது.

அதன்படி தொடர்ந்து 72 நாட்கள் நடைபெற்ற இப் பொருட்காட்சியில் ஒன்றிய அரசு மற்றும் தமிழக அரசின் அனைத்து துறைகளின் நல த்திட்டங்களையும், வளர்ச்சி பணிகளையும் பொது மக்கள் எளிதில் தெரிந்து கொள்ளும் வகையில் சுற்றுலாத்துறை, காவல்துறை, விளையாட்டுத் துறை, இந்து சமய அறநிலை யத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, கல் வித்துறை, நான்முதல்வன், வேளாண்மை மற்றும் தோட் டக் கலைத்துறை, ஆதி திரா விடர் நலத்துறை, பிற்படுத் தப்பட்டோர் நலத்துறை, மின்சாரத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, நீர்வளத்துறை, மாற் றுத் திறனாளிகள் நலத்துறை, வருவாய்த்துறை, சிறுசேமிப்புத்துறை, பெருந கர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர வளர்ச் சிக் குழுமம், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையக்குழு, தமிழ்நாடு மாசுகட்டுப் பாட்டு வாரியம் உள்ளிட்ட 41 மாநில அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்க ளின் அரங்குகள், இரண்டு ஒன்றிய அரசின் அரங்குகள் (சென்னை துறைமுகம் மற் றும் இந்தியன் ஆயில் கார்ப் ரேசன்) உள்பட 43 அரங்கு கள் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டு அரசின் சிறப்பு செயல்பாடுகளையும், மக்கள் நலனுக்காக செயல்ப டுத்தப்படும் நலத்திட்டங்க ளையும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் செயல் மாதிரிகளுடன் அரங்கங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்க ளுக்கு விளக்க மளித்து பெரும் வரவேற்பை பெற் றுள்ளது.

மேலும் இப்பொருட்காட் சியில் 110 சிறிய வணிக கடை கள், 30 தனியார் அரங்குகள், 15க்கும் மேற்பட்ட சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றி ருந்தன. டெல்லி அப்பளம், பஜ்ஜி, ஐஸ்கிரீம், கரும்பு சாறு, பானிபூரி, பால்கோவா, காலிபுளவர் பக்கோடா, சோளாபூரி போன்ற சிற் றுண்டி உணவுவகைகளும் பொதுமக்கள் உண்டு மகிழ்ந்த னர், 80,000 சதுர அடிப ரப்பளவில் 32க்கும் மேற்பட்ட இதுவரை கண்டிடாத, விளையாடி மகிழ்ந்தி டாத விளை யாட்டு சாதனங்கள்(Sunami,Chapsuel, Tora Tora, Giant wheel, Swing Chair, Octopus, Techno Jump, Screen Tower, Wind Mill and China Salambo) இடம்பெற்றது. இப்பொருட்காட்சி மூலம் நேரடியாக சுமார் 10,000 பேருக்கும், மறை முகமாக சுமார் 30,000 பேருக்கும் வேலை வாய்ப்பினை வழங் கியுள்ளது.

இப்பொருட்காட்சி யினை 5,50,000 க்கும் மேற் பட்ட பார்வையாளர்கள் பார்வையிட்டு பயனடைந் துள்ளனர்.

இப்பொருட்காட்சியில் இடம் பெற்ற 43 அரசு அரங் குகளில் பொதுமக்கள் பார் வையிட்டு மகிழ்ந்த மிகச் சிறந்த அரங்குகளை பல் வேறு பிரிவுகளின் கீழ் தேர்ந் தெடுக்கப்பட்டு அவற்றினை இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர், மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் மற்றும் சுற் றுலாத்துறை அமைச்சர் அவர் களின் பொற்கரங்களால் அத் துறையினருக்கு விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டது.

49வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட் காட்சி 2025 நிறைவு விழா நிகழ்வின் போது சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இரா ஜேந்திரன், மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பி ரமணியன், இந்து சமய அறநி லயத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு அவர்கள் ஆகி யோர் அரசு துறை அரங்குக ளில் சிறப்பாக செயலப்பட்ட அரசு துறை சார்ந்தவர்க ளுக்கு விருதுகள் வழங்கி கவு ரவித்தார்கள்.


## பெருநகர சென்னை மாநகராட்சி
## பொதுசுகாதாரத்துறை

சு.து.ந.க.எண். B2/4894/2024 — மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள் : 24.03.2025

**கீழ்க்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி மாநகர நல அலுவலர், பொதுசுகாதாரத்துறை அவர்களால் கோரப்படுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறைக்கு தேவையான இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களுக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ கருவிகள் சப்ளை செய்தல்.

| |
|---|
| பணியின் மதிப்பு தொகை **ரூ. 39,16,302/** |
| ஒப்ப முன் வைப்புத் தொகை **ரூ. 39,163/** |
| ஒப்ப நாள் மற்றும் நேரம் : **03.04.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை** |
| ஒப்பம் திறக்கப்படும் நாள் : **04.04.2025 அன்று பிற்பகல் 3.30 மணி** |
| மேலும் விபரங்களுக்கு: **https: //tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம் |

செ.ம.தொ.இ / 1151 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **மாநகர நல அலுவலர்**




காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் நாயக்கன்பேட்டை ஊராட்சி தொடக்க பள்ளியில் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நாட்டுப்புற கலைஞர்களுக்கு நினைவு பரிசு வழங்கி மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். உடன் ஒன்றிய செயலாளர். பி சேகர், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. ரீட்டா, மதுரை வீரன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் எம்.பன்னீர்செல்வம் உள்ளிட்ட கழகத்தினர் நகர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.